

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்து பள்ளிகளிலும் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கான காலை உணவு திட்டத்தினை நேற்று (25.08.2023) தொடங்கி வைத்ததை தொடர்ந்து, வேலூர் மாவட்டம், காட்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சேவூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி க. ஆர்த்தி, மகளிர் திட்ட இயக்குநர் நாகராஜன், காட்பாடி ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன் துணைத்தலைவர் சரவணன், துணை மேயர் சுனில்குமார், வேலூர் மாநகராட்சி 1வது மண்டல குழு தலைவர் திருமதி புஷ்பலதா வன்னிய ராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள திருக்குவளையில் பள்ளிக் குழந்தைகளுக்கான காலை உணவு திட்டத்தை நேற்று (25.8.2023) துவக்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து திருச்சி மாவட்டம் மணிகண்டம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு 195 பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்து பள்ளி மாணவ மாணவிகளுக்கு உணவுகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார்,மாநகர மேயர் அன்பழகன், திருரங்கம் சட்டமன்ற உறுப்பினர் பழனியாண்டி, மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி மணிகண்டம் ஒன்றிய செயலாளர் மாத்தூர் கருப்பையா, ஒன்றிய செயலாளர் கதிர்வேல் மற்றும் உதவி இயக்குனர் ஊராட்சிகள் கங்காதரணி மற்றும் அரசு அலுவலர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள், கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



ஊரக வளரச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், செட்டியபட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை நேற்று (25.08.2023) தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, அவர்கள், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி மு.மகேஸ்வரி முருகேசன், மாணவ, மாணவிகள் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநிலம் முழுவதும் அனைத்து பள்ளிகளிலும் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்து நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளையில்நேற்று (25.08.2023) தொடங்கிவைத்ததைத்தொடர்ந்து, சென்னையில்சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாணவர்களுக்கு காலை உணவினை வழங்கி, மாணவர்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர்.பிரியா, கூடுதல் தலைமைச் செயலாளர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே. சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





